**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 11/2015

Deposition Of Witness for { Prosecution PW 2 / Defense / Court

Name திரு. புஷ்பகாந்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2023

*எதிரிகள் ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of August 2023.

நான் பருத்திபாடில் வசித்து வருகிறேன். டிவிஎஸ் மோட்டரில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் தந்தை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும் ஊர்காரர்கள் பக்கத்து தெருவில் வசித்து வருகிறார்கள். 07.04.2014 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் நான் பருத்திபாட்டில் உள்ள ரேஷன் கடைக்கு சென்றிருந்தேன். அப்போது எதிரி சந்திரபோஸ் மற்றும் முத்துவேல் ஆகியோர்கள் எனக்கு அருகில் கல்லை போட்டு கொண்டு விளையாடி கொண்டிருந்தார்கள். அந்த கல் என் மீது பட்டது. நான் அவர்களிடம் சொன்னேன். மீண்டும் அவர்கள் கல்லை என் மீது போட்டார்கள்.

பின்னர் எனது அப்பாவிற்கு போன் செய்து வர சொன்னேன். அவர் ரேஷன் கடைக்கு வந்து என்னை XL பைக்கில் அழைத்து செல்லும் போது எங்கள் ஊருக்கு நுழைவு வாயிலில் உள்ள டிரான்ஸ்பார்ம் அருகில் வைத்து எதிரிகள் மற்றும் அவர்களுடன் முத்துவேல் என்பவரும் என்னையும் எனது அப்பாவையும் கட்டை மற்றும் இரும்பு கம்பியால் அடித்தார்கள். அப்பாவைய யார்யார் அடித்தார்கள் என்று கவனிக்கவில்லை முத்துவேல் என்பவர் கம்பியால் எனது இடது கையில் அடித்தார் நான் தலைசுற்றி கீழே விழுந்தேன். ஆனால் நான் மயங்கவில்லை. பார்வை மங்களாக (Blur) இருந்தது.

சுதாரித்து எனது தந்தையை பார்த்த போது அவருக்கு தலையில் இரத்தம் வந்தது. அப்போது நானும் எனது தந்தை சத்தம் போட்டதை பார்த்து ஊரில் உள்ள நபர்கள், எனது தாயார் வந்தார்கள். பின்னர் நடந்த சம்பவத்தை எனது தாத்தாவிற்கு தெரிவித்து அவர் வந்து எங்களை ஆம்புலன்ஸ் மூலம் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். வழக்கு சம்பவத்தின் போது எனது தந்தைக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் இருந்தது. மருத்துவமனையின் சிகிச்சையில் நானும் எனது தந்தையும் வேறுவேறு அறையில் இருந்தோம்.

சம்பத்தின் போது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள். போலிசார் வழக்கு சம்பவத்தை குறித்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.